உ

கடவுள் துணை.

திருமலைக்கோம்பை யென்னும்

திவ்யநகரில்

திருக்கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும்

ஸ்ரீ தண்டாயுதபாணி

தோத்திரம்.

இஃது

பெரியகுளம் தாலூகா கோம்பைநகர்

சு. பிச்சன்செட்டியார் குமாரன்

P. கணபதிசெட்டியாரால்

இயற்றப்பெற்று

ஸ்ரீலஸ்ரீ T. T. சங்கரதாஸ் சுவாமியவர்களின் மாணாக்கரும்

"மனோஹரி" என்னும் நூலாசிரியருமான

சங்கீத சாஹித்யம் திருநெல்வேலி

T. S. சிவராமலிங்கம்பிள்ளையவர்களால்

பார்வையிடப்பெற்று

மதுரை

...ரி அச்சியந்திரசாலையிற்

...க்கப்பெற்றது.

...924. [அணா 4

...ight Registered.

17 NOV 192

O26:38·41
N24
17824

உ
கடவுள் துணை.

17 NOV 1924

திருமலைக்கோம்பை யென்னும்

திவ்யநகரில்

திருக்கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும்

ஸ்ரீ தண்டாயுதபாணி

தோத்திரம்.

இஃது

பெரியகுளம் தாலூகா கோம்பைநகர்

சு. பிச்சன்செட்டியார் குமாரன்

P. கணபதி செட்டியாரால்

இயற்றப்பெற்று

ஸ்ரீலஸ்ரீ T. T. சங்கரதாஸ் சுவாமியவர்களின் மாணாக்கரும்
"மனோஹரி" என்னும் நூலாசிரியருமான
சங்கீத சாஹித்ய திருநெல்வேலி

T. S. சிவராமலிங்கப்பிள்ளையவர்களால்

பார்வையிடப்பெற்று

மதுரை

மீனலோசனி அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

விலை] 1924. [அணா 4

Copy Right Registered.

784-0855
814

12824

-600 008.

சாற்றுக்கவிகள்.

17 NOV 1924

மதுரை ஜெயின்ட்மேரி ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்

ப்ரும்மஸ்ரீ மு. கோவிந்தசாமி ஐயரவர்கள்

சொல்லிய

026 : 36 : 24
NN4

எழுசீரடி யாசிரிய விருத்தம்.

சந்தமு மகிழு மாதிவான் தருக்கள்
தரைமிசை வந்தென வொளிரும்
சுந்தரம் பெற்ற கோம்பையம் பதியிற்
றலங்குமா யிரவராம் வணிகர்
கந்தாங் கறைசேர் கடவுள ரடியைக்
கருதியே வாழ்வாக் குலத்துள்
முந்தையோர் தவத்தால் பிச்சனன் மகனாய்
மொய்ம்புற வந்தசற் குணத்தான். (1)

இருவகைப் பொருளு மியைதரப் பெற்றோ
ரிரப்பவர்க் கிலையெனு தளிக்கும்
தருநிகர் காத்தான் கணபதி நாமம்
தாங்கிய வள்ளலுள் ளன்பால்
வரதனுந் தண்ட பாணியின் புயத்தில்
வண்டமி ழின்னிசைச் சுவைகள்
விரவிட வேய்ந்து பிறந்தநற் பயனை
மேவினன் சிறப்புற மன்னோ. (2)

மதுரை ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேஸ்வரர் தேவஸ்தானம் கமிட்டிமெம்பரும்,
மதுரை ஜில்லாபோர்டு, தாலூகாபோர்டு, முனிசிபல் கவுன்சில்
செக்கண்ட்ரி எஜுகேஷனல் போர்டு மெம்பருமான

மதுரை ஸ்ரீமாந் P. M. ஷண்முகம் செட்டியாரவர்கள் சொல்லிய

அறுசீரடி யாசிரிய விருத்தம்.

ஏர்திகழும் எம்தண்டா யுதபாணி தோத்திரங்கள்
 இசைகள் மேவப்
பார்திகழும் பக்தர்ஜன மிகவெளிதா யுணர்ந்தோதப்
 பாடித் தந்தான்
சீர்திகழும் வணிகர்குல சிகாமணியாய்க் கோம்பைநகர்
 சிறக்குந் தாசன்
பேர்திகழும் பிச்சனருந் தவத்துதித்தோன் கணபதியாம்
 பேர்வல் லோனே.

வேம்பத்தூர் சிலேடைப்புலி ப்ரும்மஸ்ரீ பிச்சுவையரவர்கள் குமாரரும்
தமிழரசு என்னும் மாதாந்தப் பத்திரிகையின் பொறுப்பாளரும்
மதுரைக்காலேஜ் தமிழ்ப் பண்டிதருமாகிய

ப்ரும்மஸ்ரீ பாஸ்கர ஐயரவர்கள் சொல்லிய

வெண்பா.

காட்டிற்றற் கால நவீனசங் கீதப்பா
பாட்டிற்றண் டாயுத பாணிநற்—சூட்டுணேயிற்
சேர்த்திட்டான் கோம்பைவரு சீமான் கணபதிப்பேர்க்
கீர்த்திமிக்க புத்தியூ கி.

முத்தமிழ் க்ஷேத்திர மதுர

பாஸ்கரதாஸ் அவர்கள் சொல்லிய

வெண்பா.

கந்தப்பா எத்தனையோ காதுக் கினியதமிழ்ச்
சந்தப்பா கேட்டாய்நீ தானெனினும்—இந்தப்பா
கோம்பைக் கணபதிதான் கூறித் துதிப்பதுகேள்
மாம்பழத்தி னின்சுவையே மற்று.

மதுரைத் தமிழ் வித்துவான்

ஸ்ரீ நா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் சொல்லிய

வெண்பா.

மாம்பழத்துக் கன்றோ மலையேறி நீதனித்தாய்
சாம்பசிவன் நின்றந்தை தந்தானு—கோம்பைநகர்த்
தாசன் கணபதிதான் தந்தான் வடிவேலா
ஆசையுட னேற்பா யறிந்து.

உத்தமபாளையம் போர்டு செக்கண்ட்ரி ஸ்கூல்

தமிழ்ப்பண்டிதர்

ஜனுப் U. P. அப்பாவு உபாத்தியாயரவர்கள் சொல்லிய

வெண்பா.

பூநிறைத டாகம் பொழில்புடைசூழ் கோம்பையெனும்
மாநிலத்திற் பிச்சன் மகிழ்ந்தீன்ற—ஞான
இதவான் கணபதிவேள் இன்னிசையாற் றண்டா
யுதபாணி.தோத்திரஞ்சொற் றான்.

அனுமந்தன்பட்டி துரிதகவி வித்வான்

அந்தோனி முத்துப்புலவரவர்கள் குமாரர் மகா-ள-ள-ஸ்ரீ

ஆசீர்வாதம்பிள்ளை உபாத்தியாயரவர்கள் சொல்லிய

வெண்பா.

சீரார் பொழில்சூழ்ந்த தென்கோம்பை மாநகரில்
பேரார்ந்த பிச்சன் பெருந்தவத்தான்—ஏரார்
கணபதிவேள் சொற்ற கலைத்தமிழ்ச்சங் கீதம்
மணமிகுமா லெண்டிசையு மற்று.

தண்டாயுதபாணிக் கடவுள்.

சித்திவிநாயகர் துதி.

எத்திறத் தோரும் எற்றித் துதிக்கும்
சித்திவி நாயகன் சேவடி துணையே.

அறுசீரடி யாசிரிய விருத்தம்.

கமலநான் முகன்மா லாதி கடவுளர் தமக்கு மேனை
மூமலமு மகற்றுந் தூய முத்தர்க்கு முன்னோ னாகிச்
சமரச மாமெய் யன்பர் தம்முளக் கோயில் வைகும்
விமலமெஞ் ஞான சித்தி விநாயகர் பாதம் போற்றி.

இராகம்—ஆனந்தபைரவி. தாளம்-ஆதி.
(வாவா கஜமுகனேநீ வரமருள என்ற மெட்டு.)

பல்லவி.

காவா கணநாதனே கதியளித்து (காவா)

அநுபல்லவி.

வாவா வாமதனைத் தாவா தருணமிது (காவா)

சரணம்.

பூவார் புனைகருணை
தேவா தெரிசனமே
ஈவா யேடல்நாடேனே நாவாலுனைப்பாடேனே
நக்கனருள் புத்திரனே அத்திமுகா இக்ஷணமே. (காவா)

நித்தம் நினதடியை
நத்தும் அடியேன்மீது
சித்தம் வைத்தாள்வாயே சித்திவிநாயகாநீயே
சிந்தனைசெய் கணபதிக்குச் சந்ததமும் வாக்களித்து (காவா)

நாமகள் துதி.

நலமுறு திருமறை
மலரயன் மகிழ்வுறு
கலைமகள் மலரடி
தலைமிசை யணிவாம்.

இராகம்-தேசிகத்தோடி. தாளம்-சாப்பு.
(அம்பிகா உன்மகன் குகன் என்ற மெட்டு.)

கண்ணிகள்.

வித்தகா வேதபூஷணி வேண்டினேன் ஞானபாஷணி
நித்தமும் போற்றினானே நினைந்துருகி வாடுறேனே
சித்தமே கனிந்துதானே
தீரும் பாவம் ஏகும் சோகம். (வித்த)

சின்மய தேஜோரூபி சிருஷ்டிசெய் தேவபாரி
என்வினை தீர்க்கக்கோரி
ஏழை நாவில் வேதம் ஓதும். (வித்த)

பத்தரை மாற்றத்தங்கம் பாவல ரேத்துந்துங்கம்
நத்தினேன் பாதகஞ்சம்
நாளும் தாரும் நாலா கலையே. (வித்த)

சீர்மேவுங் கோம்பைப்பதி சிறந்திலங்குந் தூயமதி
செந்தமி ழாற்கணபதி
சிந்தை வந்து தங்கும் சுந்தரி. (வித்த)

ஈஸ்வரன் துதி.

இராகம்-தேசிகத்தோடி. தாளம்-ஆதி.
(பரமானந்த மெய்ப்பரங்குன்றேன் என்ற மெட்டு.)

பல்லவி.

கருணாகரச்சுடர் முக்கண்ணன் காமதகனன் (கரு)

அநுபல்லவி.

கார்மதம்பொழி கரியுரி தரித்தோன்
கண்ணப்பதேவர்க்குக் கதியினை யளித்தோன்
பார்தனில்பிச்சை வாங்கியே புசித்தோன்
பக்தரின்நேசம் இச்சையாய் வகித்தோன் (கரு)

சரணம்.

வனமீதில் வேடனாகச் சென்று—மாதுமையாளுங்
கனமாம் கணநாதருடன் அன்று—தவம்புரியும்
குணவான் விஜயன்பக்கம் நின்று—மாபாதகனால்
முனமே ஒளித்திருக்கும் பன்றி—உயிரைவாங்க
அஞ்சாறு வெஞ்சாபம் நன்றாக வில்லினில்
தொடுத்தான் — தருணம்பார்த்து
நெஞ்சார அஞ்சாமல் வங்கார மார்பினில்
விடுத்தான் — அதுசமயம்
சம்போவே சம்போவே என்போனும் அம்பினை
விடுத்தான் — இருவருக்கும்
வெங்கோப முண்டாகி யிந்திரன் மைந்தனன்
றடித்தான் — முன்னமேதிரி
புரத்தையுஞ் சிரித்துநற் சாத்தினை விடுத்துமே
யெரித்தான் — ஆற்றின்மணலை
காத்தினி லணைத்தவன் வாத்தினை மதித்துமே
யளித்தான் — இலங்கை வேந்தன்
ஊத்தினைக் கெடுத்துமே சிரத்தினைப் பதத்தினால்
மிதித்தான் — மலையத்துவஜன்
வாத்தினி லுதித்தவள் களித்திடத் தடத்தினை
யழைத்தான் — இன்னமுமே
அயனரிகாணச் சுயம்பிரகாசன்
ஆனந்தநடனம் ஆடுஞ்சபேசன்
நயமிகு கணபதி நாடுஞ்சர் வேசன்
ஞானிலம் போற்றிடு மேருவில் வாசன் (கருணா)

அம்பிகை துதி.

இராகம்-தேசிகத்தோடி. தாளம்-ஆதி.

(சண்முகா உன்னிருதா ளெண்ணியே என்ற மெட்டு.)

பல்லவி.

அம்பிகா உனைநினைந்து வெம்பினேன் அடியேன்மீது
வம்புக ளேதுஞான சுந்தரீ உனைநம்பினேன் (அம்)

அநுபல்லவி.

தும்புரு நாரதர் உம்பர்கள் யாவரும்
கும்பிடுந்தேவியெனை அன்பினால் உனதருளை
தந்துகா கங்கையுடன் அம்புலி தலையில்சூடும்
எம்பிரான் தனைமருவு சங்கரீ ஆண்டருள்வாய் (அம்)

சரணம்.

அன்னையே அருணகிரி நண்ணியே வல்லாளர்க்கு
முன்னையே அரனுடனே சின்மய ஒளியுடனே
கன்மவினை யொழித்தாய்
நன்மைதனை யளித்தாய்
உன்னியே உனையனுக எண்ணினேன் அதுவறிந்து
கண்ணினால் கிருபையொடு உன்னத பதமளிப்பாய்
சொன்னேனே கணபதி தன்னையே ஈன்றதாயே. (அம்)

மகாவிஷ்ணு துதி.

இராகம்-கல்யாணி. தாளம்-ரூபகம்.

(வேலா நீ கதியே என்ற மெட்டு.)

பல்லவி.

ராமா நீதுணையே
நேம மாகப் பூஜை செய்தேன் (ராமா)

அநுபல்லவி.

வாமனவதாரலோலா வல்லரக்கர் சத்ருசீலா
தாமரையாள்பாகமேவும் தனுக்கோடி கண்டபாலா (ராமா)

சரணம்.

ஜனகராஜன்பெற்றெடுத்த ஜானகிக்கேவில்வளைத்த
கனகமணிரத்தினமே காலந்தோறும்போற்றினேனே. (ராமா)

பன்னகப்பாயின்மீது படுத்துறங்கும் பரமசாது
என்வினைதவிர்ப்பாய்நீயே ஏழை மீது வாது ஏது (ராமா)

குன்றெடுத்த கோபாலனே குறைதவிர்க்கும் மாதவனே
என்றுங்கணபதியைக்காக்கும் ஏனமான மாயவனே. (ராமா)

கன்னிகா பரமேஸ்வரி அம்மன் துதி.

இராகம்-தன்யாசி. தாளம்-ஆதி.

(நாக்கே பலபல நாமமேடாதே என்ற மெட்டு.)

பல்லவி.

கன்னிகா பரமேஸ்வரித் தாயே
கருணை புரிந்தொரு வரமருள் வாயே. (கன்)

அநுபல்லவி.

சின்மய ரூப தெரிசனம் தருவாய்
சிறியேன் கதிபெறச் சீக்கிரம் வருவாய். (கன்)

சரணம்.

அன்னிய ஆசை அனைத்தையும் போக்கி
அய்லார் நேச மானதை நீக்கி
என்வினை யாவையு மிசைந்துசீர் தூக்கி
இகபர சுதந்திரம் ஈகுவாய் நோக்கி. (கன்)

கொலைபொய் களவு குடியுடன் காமம்
குண்டணி கோள்கள் கூறிடா நேமம்
தலைவிதி யாலும் தவறிடா க்ஷேமம்
தந்தெனை யாள்வதே தமியேனுக் கேமம் (கன்)

உலக மாயையா லுழலுமிப் பாவி
உய்யவே ஒருவழி உதவிசெய் மேவி
பலமுறை நாளும் பனிமலர் தூவி
பணிவேனுன் பாதம் பரமசஞ் சீவி (கன்)

நூற்று இரண்டாம் நுங்குல கோத்ரம்
நூதன மாகவே கட்டிய க்ஷேத்ரம்
வீற்றிருந் தாயேஉன் விரியலர் நேத்ரம்
விலாசந் தனைக்காண விரும்புதல் காத்ரம் (கன்

அருந்தவ முனிவர்கள் யாவரும் போற்றும்
அந்தணர் கூட்டங்கள் அருமறை சாற்றும்
திருமலைக் கோம்பை சிறந்திடத் தோற்றும்
சேயனுங் கணபதி தன்னைக்காப் பாற்றும் (கன்)

தண்டாயுதபாணி துதி.

இராகம்-தேசிகத்தோடி. தாளம்-ஏகம்.

(ஜாதி மாதமுதல் என்ற மெட்டு.)

கண்ணிகள்.

தென்கோம்பை மாநகர் சங்கான் தன்சுதா
தெண்டா யுத பாணியே—வேல்பிடித்தாய்
செந்தா மரைப் பாணியே.

சூர்குலத்தினை வேரோடழித்தவா
நாராயணன் மருகா—எந்நாளுமே
காவாயெனைமுருகா

பஞ்சமாபாதகம் நெஞ்சினிற்கொள்ளாமல்
வந்தெனையாள்வாய்நீயே—என் ஆண்டவா
கெஞ்சினேன்நானுன்னையே.

செந்தமிழ்க்கணபதி வந்தனம்சூடிடும்
சுந்தரச்சண்முகனே—தெய்வானைமகிழ்
தந்திசகோதரனே. (தென்)

இராகம்-இ-தோடி. தாளம்-ஆதி.

(கணபதியே துணையிருக்க என்ற மெட்டு.)

பல்லவி.

குமரகுரு சரவணனே கிருபைசெய்வாய் பூஜிதனே (கும)

அநுபல்லவி.

அமரர்வினைதீர்த்தபாலா அருமை பெருமை உரிமை கொண்டு (கும)

தோகையரா.

மாலானவள்ளியை மாறுவேடங்கொண்டு மணமதுபுரிந்த தீரா
பாலானஎன்மொழி கேட்டுநீ கருணை பாலிக்காத தென்ன சீரா

மூடுகு.

நித்தியம் பூஜை வந்தனம் பக்தியாய்ப் புரிவேன் மந்திரம்
சுத்தியாய்க் கணபதி முத்தியடையும் புத்தி தருவாய்
சித்த மெனவோ நத்தினேனே. (கும)

இராகம்-கமாஸ். தாளம்-ரூபகம்.

(சுஜன ஜீவனு என்ற மெட்டு.)

பல்லவி.

செந்தில்வேலவா சிவ காமிபாலகா சாமி (செந்)

அநுபல்லவி.

கஞ்சபாதனே ஸ்வாமி கருணைநாதனே
தஞ்சமென் றுன்னை நம்பினேன்குக தண்டபாணியே சாமி(செந்)

சரணம்.

சரவணபவ சண்முகநாத தந்திசோதரா
பாருலகில் சூரபத்மன் பணியும்ஸ்ரீபரா
பாஞானதேசிகா பக்தர் பணியும்பூஜிதா
காவையாகின் கருணையாற்கண பதியும்பூஜித்தேன் சாமி (செந்)

இராகம்-சுத்தபங்காளா. தாளம்-ஆதி.

(தொலினே ஜேஸின என்ற மெட்டு.)

பல்லவி.

கருணாகரனே கதியேதருவாய்
அருமாமறையே ஆதரிப்பாயே (கருணா)

அநுபல்லவி.

குருவாய்வருவாய் குமரேசனேநீ
திருவாய்திறந்து செப்பிடும்பொருளே (கருணா)

சரணம்.

கனிவாய்திறவா தழகிதோகுகனே
உனையேநாடினேன் உமையவள்மகனே (கருணு)

தினமாவுண்டாய் செங்கனிவாயா
தனயன்கணபதி தரிசிக்கும்நேயா (கருணு)

இராகம்-ஆரபி. தாளம்-ஆதி.
(பாதுகையே என்ற மெட்டு.)

பல்லவி.

சேவடியே — உயர்
சிவகதி தருவதும் பவவினை களைவதும் (சே)

அநுபல்லவி.

ஆவலுடனே வள்ளி மாதினை மணந்த
ஆறுமுகவ னிரு அதியழ கமைந்த (சே)

சரணம்.

பூவுலகனைத்தும் போற்றுமபேதன்
பூதியின்மகிமை புகழ்க்குஞ்சுபோதன்
பாவலரனுதினம் பணியுமதீதன்
பாவையர்மனமகிழ் பாலவிநோதன் (சே)
சாவணபவனெனுஞ் சடாக்ஷரரூபன்
சராசரமுழுதும் சர்வவியாபன்
கரிணியின்முத்தம் கருதுஞ்சல்லாபன்
கணபதி துதிக்கும் கருணைப்ரதாபன் (சே)

இராகம்-தன்யாசி. தாளம்-ஆதி.
(வருத்துவதழகோ என்ற மெட்டு.)

பல்லவி.

திருத்துவ தரிதோ—தேவா
சிந்தை நோகுதே திருத்துவ தரிதோ சொன்னேன்

அநுபல்லவி.

மருப்படா மேனி கருத்திட வீணில்
மாதாலே எறிந்தகணை கொஞ்சமா (திரு)

சரணம்.

விலைமகளாசை வேண்டிடா திருத்தி
வேத வாக்கியம் விரும்பிடப் பொருத்தி (திரு)

ஜலவித மாயை பற்றிடா தகற்றி
பாக மாயருள் அமுதினைப் புகட்டி (திரு)

தணலெரி காங்கை தந்திடும் வேசி
தாளடி வீழ்வது தகுதியோ யோசி (திரு)

கணபதி தமிழைக் கனிவுடன் பேணி
காத்திடு வாயே கண்ய தண்டபாணி (திரு)

இராகம்-செஞ்சுருட்டி. தாளம்-ரூபகம்.
(மஞ்சுநிகர் குந்தளமின்னே என்ற மெட்டு.)

தண்டபாணி சாமிகுருவே
சந்ததமும் உன்றனைநான்
தரிசிப்பேன் கற்பகத்தருவே—பெருந்
தந்திமத்தக கொங்கைப்பொற்றொடி
வஞ்சப்புத்தியில் நெஞ்சம்பற்றிடா
தன்மையீந்தோர் நன்மைசெய்வேலா
அந்திநேரம் சந்திகாலம்
சங்குநாதமு மூங்குமனுகூலா (தண்)

பண்டுமறை வேதமுதலாய்
பரமசாதும் குரவரோதும்
பச்சைமயில் வாகனலோலா—பாச
பந்தமானது எந்தநேரமும்
உந்தலாகுமோ தண்டபாணியே
பாதபங்கயமே கதியே
அடியேன்மீது கடினமேது
பக்ஷமுடன்ஆளு மித்தருதியே (தண்)

வண்டுலவு மாமலர்ச்சோலை
வளமிகுந்த அழகமைந்த
வாசமிகும் கோம்பைமாநகர்—தனில்

வந்துதங்கிய பொங்குமங்கள
மங்கைகுஞ்சரி கொஞ்சுகந்தனே
வளையல்செட்டி வடிவமானயே
சீர்கணபதி நேர்சகோதரா
வந்துபுகழ் தந்தருள்வாயே (தண்)

இராகம்-செஞ்சுருட்டி. தாளம்-ரூபகம்.
(வெள்ளிமலை யொத்தமல மேடை என்ற மெட்டு.)

கண்ணிகள்.

கோம்பைநகர் தன்னிலுறை கோவே—என்றன்
குற்றமதை நீக்கியருள் தேவே—பூங்
கோதைமயில் வள்ளிதனைச் சோதனை புரிந்ததிருக்
குமரா — கொடுஞ்சமரா

கருணைமழை பொழியுந்தண்ட பாணி—உன்றன்
காக்ஷிதனைக் கண்டுணர்ந்தேன் நாணி—இரு
கமலமுக மாதர்களும் சாசமுடன் கூடிடநான்
கண்டேன் — மகிழ்கொண்டேன

சேவல்தனைக் கொடிபிடித்தாய் தீரா—நின்
சித்தமதை யாரறிவார் வீரா—பல
தேவர்துயர் தீர்த்திடநீ ஆவலுடன் போர்புரிந்தாய்
திருவே — ஞானகுருவே

கணபதி தனக்குநாளுங் கதியே—தந்து
காக்கநற் சமயமிது ததியே—வெகு
காதலுடன் மாங்கனிக்காய்ப் பூதலமே சுற்றிவந்தாய்
கந்தா — சிவன்மைந்தா.

இராகம்-செஞ்சுருட்டி. தாளம்-அடதாளச் சாப்பு.
(செந்தில் மாநக ரந்தனில்மேவிய என்ற மெட்டு.)

கோம்பை மாநகர் ஓங்கிட வந்தவன்
குமரனை தண்ட பாணி—சூரர்
அமரினை நன்றுமே பேணி—வேல்

கொண்டோடிட தண்டையாடிட அண்டலோகமுஞ் சென்றிடுகையால்
குலுங்கினர் தேவர் யாவருந் தேறவே
கொடுங்கொலை தீர்த்தம யூரன்—நமது
இடும்பைகள் தீர்க்குமெய் யாரன்
மாம்பழ மாங்கனி வாங்கவே பூமியை
மயில்மிசை யேறியே சுற்றினன்—வள்ளி
குயில்மொழி மாதுகைப் பற்றினன்—வெகு

மந்தகாசமா யிங்கிதம்பேசி சம்ப்ரதாயமா யன்பினேடென்
மார்பு மீதினி லேகாம் சேரவே
மருவி யணைந்தானே மேவி—குகனை
விரும்பியே தேடுதென் ஆவி
தேம்பொழி சோலையி லாங்கவன் நின்றதன்
தேஜஸைப் போலநான் கரணேன்—சில
வாசகம் பேசவே போனேன்—அங்கே

திங்கள்மாமுக மங்கைமார்களா யெங்குமேகாம் நன்குசேர்த்துமே
சிந்தனை போகம் பொங்கிடக் கூடியே
செந்தில் வேலனோடு ஆடினர்—ராகம்
செஞ்சுருட்டி யாகப் பாடினர்
பூங்குழல் மாதெனைத் தேங்கவே விட்டவன்
பூசனைக் கேயுரிய ஈசன்—கணபதி
நேசமே கொள்விசு வாசன்—சிறு

புன்னகைதனி லென்னகமது உன்னியேறுதே என்னசெய்குவேன்
பொன்மை யாயெனை முன்னே யணைந்தவன்
பூங்கணை மயங்கவே சாடுதே—முருகன்
பாங்கினிலே மனம் நாடுதே.

இராகம்—பைரவி. தாளம்—ரூபகம்.
(கோஞ்சம் சங்கடமா என்ற மெட்டு.)

புல்லவி.

நெஞ்சம் இரங்கலையா ஒளிர் நீலமயிலேறும் வேலாயுத சாமி
நேமம்விடா தடியேனுன் நாமமதை யோதியுமே (நெஞ்)

அநுபல்லவி.

நேச மறவாத தாசனு மெனக்குப்
பாச மகற்றி தேசு நிறைந்த
பரம பதத்தைத் தருவதற் கின்னம் (நெஞ்)

சரணம்.

தஞ்ச மென்றுன்னை நம்பினேன் நானே
சந்ததம் என்றனைக் காத்திடுங் கோனே
பஞ்சமா பாதகம் நெஞ்சினில் தானே
பற்றிட விட்டிடா தேயென் செந்தேனே
பதிபுகழும் கதிர்வடிவேல்
பரமகுரு சாமி
கதிபெறவே கணபதிக்குக்
கருணைபுரி நேமி
பக்திக்கே உன தற்புத
சித்திக்கே இரு பொற்பத
சுத்திக்கே மன மொப்பினேன்
முத்திக்கே வழி செப்பிடு
பாலனே சுடர் வேலனே புகழ்
சீலனே வள்ளி லோலனே—கந்தா
பாராதே யெனைமறந்தால்
தீராதே மனமுவந்தே
பாத்திரனை அடுத்திடும்
வாத்திரனைக் கொடுத்திட (நெஞ்)

இராகம்-செஞ்சுருட்டி. தாளம்-ஆதி.
(செந்தமிழை யுலகினில் தந்துதவுங் கந்தனே என்ற மெட்டு.)

கண்ணிகள்.

அண்டினோரையாதரிக்கும் தண்டாயுதக்கையனே
அன்பாகவேயும் ஐயனே கிருபைதனைத்
தந்தாள வேணும் துய்யனே
அநுதினமுனதிரு மலரடிதொழுதிடும்

சுடர்மணிகணபதி மனதினில்நாளுமே
அரியதமிழையோதுமே உமாபதிக்குத்
தெரியவே சொன்னாய் வேதமே (அண்)

நஞ்சினுங்கொடியநேத்ர வஞ்சகமாதர்மையல்
மிஞ்சிடாதருள்செய்வாயே கருணாமூர்த்தி
தஞ்சமுன் னடி காப்பாயே
நமனெனஉலகினர் ஒருவருமறிகிலர்
கொலைபலகளவுகள் சதிபலபுரிகுவர்
நாரிகள்செய்யும்மோசமே இச்சண்டாளரைச்
சாருதல் வெகு தோஷமே (அண்)

சேணியன்கைச்சேலைகட்டி மேனிமினுக்குந்தட்டு
வாணியைநம்பலாகுமோ அவர்களாலே
நாணி மயங்க லாகுமோ
சிறுநகை யழகொடு குவிமுகை தெரிதா
பலபுருஷரையுமே ஒருநொடிதனிலே
சித்தங்கலங்கச்செய்குவர் பொருள்பறிக்க
நத்திப் பழமை பேசுவர் (அண்)

வம்புகள்பேசிப்பல துன்பத்துக்காளாக்கி
மன்றுக்கிழுத்துவிடுவர் பொய்ச்சாக்ஷிசொல்லி
என்றைக்கும் வசை தேடுவர்
வரவாநாளும் குறைமொழிபேசும்
விலைமகளாசை கனவிலுநினையா
வரந்தருவாயமரேசா அம்பிகைபாலா
சுரமகள் மருவுங் குமரேசா (அண்)

இராகம்—சங்கராபரணம். தாளம்—ஆதி.
(அவதார புருஷன் என்ற மெட்டு.)
பல்லவி.

தண்டாயுதக் கையனே தனயன் நானே
உனைத்தானே துதித்தேனே (தண்டா)

அநுபல்லவி.

அண்டினேனுன்றனை ஆதரித்தருள் (தண்டா)

சரணங்கள்.

பார்வதி தனைவிரும்பிப் பஜனைகள் செய்யும் சிவ
பக்தரைக்காத்திடும் நாதா—முன்பு
பரமனின் செவிதனில் பிரணவமறைதனைப்
பரிவுடனருளிய வேதா கமலபாதா அருள் தாதா (தண்டா)

முத்துக்குமாரசாமி முத்தியடையவென்று
முடித்தநற்கோயிலை நாடி—மிகு
முகமலர்ச்சியுடன் அகமகிழ்ச்சியொடு
மூலஸ்தானமதைத்தேடி அநேகங்கோடி புகழ்பாடி (தண்டா)

காட்டினில் தினைப்புனம் காவலிருந்தவள்ளி
காமதைப்பற்றிய சீலா—சிறுவன்
கணபதியனுதினம் குணமுடன் துதித்திடும்
கற்புடைஉமையவள் பாலா கருணைவேலா அனுகூலா (தண்டா)

இராகம்-சங்கராபரணம். தாளம்-ஆதி.
(எப்போதானிரங்குமோ என்ற மெட்டு.)

பல்லவி.

கங்கை யணிந்தவனே
காட்சி தருவாய்சிவனே. (கங்)

அநுபல்லவி.

அங்கயற் கண்ணிமேவும் அரனேயுன் பாதம்தாரும்
அந்தார சுந்தரா ஆண்டிடுவா யென்றனையே (கங்)

சரணங்கள்.

சங்கத்தமிழ் கொடுத்தாய் சமணமத மறுத்தாய்
சங்கரா சம்புவே தனயனுக் கிங்கென்னதந்தாய் (கங்)

பற்குண னுணையடிக்கப் பாசுபதம் நீயளிக்கப்
பாலனுன் நாளுமே பரிதபிக்க லாமோ ஈசா (கங்)

சற்குணன் கணபதி சாற்றுஞ்சங்கீதக்கவி
சந்தமே வந்தனம் சந்ததமும் சந்தோஷமே. (கங்)

இராகம்-பியாக். தாளம்-சாப்பு.
(பாலபிஷேகப் பழனிமலையப்பன் என்ற மெட்டு.)

பல்லவி.

தேம்பொழி சோலைசூழ் தென்கோம்பை யம்பதி
தெண்டா யுதபாணி திவ்யரூபம்

அநுபல்லவி.

சாந்த மனத்தொடு தரிசனம் செய்திடில்
சங்கட தோஷங்கள் பாவுந் தீரும் (தேம்)

தொகையரா.

சாவணப் பொய்கைதனில் ஜனித்திட்ட சண்முகபாலன்
சார்களுக் கிடுக்கண்செய் சூரைத் தொலைத்திட்ட காலன்

பல்லவித்தொடர்.

திருமலை சூழ்தரு திருநகர் வாசன்
விருதுக ளணிபல விளங்கிடு மீசன்
சீர்படைத்த முகில் மாது குறத்தியை
மார்பொ டணைத்துமே மையல் தீர்த்தோன் (தேம்)

தொகையரா.

அன்பரைக் காத்திடும் அனுதிஜெய ரக்ஷகன்
துன்புறவேலை துயர் தவிர்க்கும் துவிஷட்புஜன்

பல்லவித்தொடர்.

அகில்புனுகு ஜவா தணிந்திடுந் தேகன்
சிகிமிசை யுரமொடு சிறந்திடும் யோகன்
சீர்த்திசேர் கணபதி செப்பிடுந் தமிழ்ப்பதம்
பூர்த்தியாய் நிறைவேற்றும் பொற்கழலான் (தேம்)

இராகம்-ஆனந்தபைரவி. தாளம்-ஆதி.
(எங்கேநீ வந்தாயோடா என்ற மெட்டு.)

பல்லவி.

தஞ்ச முன்னடி சேவை
தந்தெனை யாள்வாய் கோவே தண்டபாணி (தஞ்)

அநுபல்லவி.

செஞ்சிலம் பணிபாதா தேவர்கள் போற்றும் நாதா
விஞ்சை நிறையும் வேதா வினைதவிர்த்தா ளொண்ணுதா
நீதா தண்டபாணி (தஞ்)

சரணங்கள்.

வறுமை மெய் பிணி சோர
வகைநல மீவாய் சிராய்—தீர வறுமை
வெறுமையடைந்தேமனம் வெறுக்குதுலகம்தினம்
சிறுவனின் இருதயம் சிதறிடாதருள்கயம்
சுயம் தண்டபாணி. (தஞ்)

பந்த பாச வினைகள்
பற்றிடா மலையருள்—இருள் பந்த
தொந்தரை கொடுக்காது துயாகற்று மிப்போது
சந்ததம் கணபதி தாள்பணி சுரர்பதி
ததி தண்டபாணி. (தஞ்)

இராகம்-இ-தோடி. தாளம்-ஆதி.

(வனசாக்ஷி என்ற மெட்டு.)

பல்லவி.

குமரேசா குவலயந்தினம்புகழ் குமரேசச
கூளத்துங்கரு ணாகரத்துமுயர் (கும)

அநுபல்லவி.

சமாசப்பொருளினைத் தாவிதுசமயம்
எமபடா ணுகிடா திருகழலபயம்
உமதருள்கதிபெற உடலுயிருபயம்
உலகமாயை யதனில்வீழா துனதுசாயை அருளுவாயே (கும)

சரணங்கள்.

அகமதுநிலையிலா தலைகுதேஜயா
சகமிசைசுகமிலா வாழ்வதோதுய்யா
இகபாசாதனம் இரண்டினுமெய்யா
இன்பந்தாரும் துன்பந்தீரும் அன்பன்நானே கெஞ்சினேனே (கும)

பரமசந்தோஷம் பரவிடுங்காலம்
அரகாரஉனதடி தொழுதிடாஞாலம்
விரஜனுங்கணபதி விரும்பிடுமூலம்
விமலதேவா கமலபாதா அமலபாலா கருணைவேலா (கும)

இராகம் செஞ்சுருட்டி. தாளம்-ஏகம்.

(துலங்குசேம்பொன் கோபுரமின்ன என்ற மெட்டு.)

கண்ணிகள்.

சிறந்திலங்கிய மணிமுடி யணிந்திடும்
தெண்டா யுதபாணியே தேவாஉன் றுளா விந்தமே
கண்டோர் களுக்குத் தீவினை தீருங் கந்தனே
சிவனுட னுமைபெறு மறுமுகசரவண
தெண்டா யுதபாணியே தேவாஉன் றுளா விந்தமே
கண்டோர் களுக்குத் தீவினை தீருங் கந்தனே
திடுக்கிட வாக்கரொ டனைத்தையு மறுத்தவா
தெண்டா யுதபாணியே தேவாஉன் றுளா விந்தமே
கண்டோர் களுக்குத் தீவினை தீருங் கந்தனே
தேவபதி யான்மகளை மேவுகதிர் வேல்முருகா
தெண்டா யுதபாணியே தேவாஉன் றுளா விந்தமே
கண்டோர் களுக்குத் தீவினை தீருங் கந்தனே

சிறியேன் புகழா யுன்மேலே
தினமுங் கவியாய் மேன்மேலே
சொரிந்தேன் மலரா யன்பாலே
சுயகவி மதாக் கணபதி போலே

சுருதிகலை சொல்வோர் யார் வேலா—மனமகிழ்ந்து
சுருதிகலை சொல்வோர் யார் வேலா

இராகம்-கமாஸ். தாளம்-ரூபகம்.

(மாத்தாட பாரதேனு என்ற மெட்டில் பின் மகுடம்.)

பல்லவி.

தண்டாயுதக் கையனே ஸ்ரீசண்முகனே (தண்)

அநுபல்லவி.

எண்டிசை யோர்புகழும் எம்பிரான் தன்சுதனே (தண்)

சரணங்கள்.

கண்டோசகமகிழும் காட்சிதருபவனே
பாண்டார வடிவாகிப் பாலனையாள் குகனே

பலவிதமுமென தகமதனில்துயர்
நிலைபெறுமோஅதி யமுகமையுகெடும்

பாதமே கதிதாருமே கலை
ஓதுமே இதுநீதமே ஒளிர் (தண்)

அண்டினேர்க் கிதம்புரி அரசே அறுமுகனே
கண்டுசர்க்கரைதேனே கருணைக்குருபரனே

கனிவுடனேநின திணையடியைத்துதி
கணபதியும் புகழ் கவியருளும் வடி

வேலனே வள்ளி லோலனே அனு
கூலனே உமை பாலனே ஒளிர் (தண்)

இராகம்-பிலகரி. தாளம்-ரூபகம்.

(என்னகேள்விமுறை என்றமெட்டில் பின் மருடம்)

பல்லவி.

தாமதமேனே தண்டபாணிஉன் தரிசனைக் கின்னமும் (தாம)

அநுபல்லவி.

நேமமாயுன்றன் நாமமதைப்பல பாவர் லோதியும் (தாம)

சரணங்கள்.

பூமியில் நாளும் போற்றத்தகுந்தவா
பூசனைபாடல் புரிதற் குகந்தவா
மாமன் ரகுபதி மருகனுய் வந்தவா
மகபதி சேயை மருவியணைந்தவா
மலைமகளின் புத்திரனே
சிலைமதனின் மைத்துனனே

கலையுதவும் வித்தகனே
கலாபமயில் கீர்த்தனனே
கந்தா வரந்தந்தா ளெனையெந்தா யின்னமும் (தாம)

பாலன் படுந்துயர் பார்க்காததேனோ
பக்ஷம் என்பது பாராமுகந் தானோ
காலன் கீதியில் கஷ்டப்படுவேனோ
காட்சி தாராவிடில் கவலையொழிப்பேனோ

கனகமணி முடியொளிர
அனவரதங் கிரிவளரும்
வனமகளைப் புணர்குமரா
கணபதியின் மிடிதளர
காக்க வினையைத்தீர்க்க அருள் நோக்க இன்னமும் (தாம)

ஸ்ரீராகம். தாளம்-ஆதி.

(சீராமவரதனே என்ற மெட்டு மருடம்.)

பல்லவி.

வேலாயுத முருகா விமலசுதா (வேலா)

அநுபல்லவி.

கோலாகல நயன கோதையர் லோலா
கோகனக பாத கோடமர் சீலா (வேலா)

மதுடம்.

குறபத்தினிமகிழ் சிவசுப்பிரமணி
ரசமுற்றிடுபல கவிசெப்பிட அருள் (வேலா)

கூவிளமாமலர் சூடியமார்பினி
லேதிகழ்ஜோதித மாகியகூர்வடி (வேலா)

குறுமுனிவினவிய பொருள்தனையருளிய
குருபரனெனவரு சரவணபவசிவ (வேலா)

17821

சரணம்.

பாலாபிஷேகந்தினம் பக்ஷமாய்க்கொள்விசாகா
பார்புகழ் கணபதி பாமாலையணி வாகா
நீலமாமயி லேறும் நேர்த்தியாயுள்ள தேகா
நேசமாயன்பர்கட்கு நித்தியமருளும் யோகா (வேலா)

இராகம்-இ-தோடி. தாளம்-ஆதி.

(பரமானந்த மெய்ப்பரங் குன்றேன் என்ற மெட்டில் வேறு)

பல்லவி.

அழகோ வர்ணிக்க முடியாது அருள்தந்திடும்
பழனி புரிக்குமாசாது. (அழ)

அநுபல்லவி.

அத்தி வளர்த்திடு மத்திகளித்திட
நத்தி விழித்திடு நித்ய விசித்திர (அழ)

சரணங்கள்.

ஆல மொத்திடு பவளமு மாகதம்
நீலமுத்துடன் குருமணிவயிரமும்
ஞாலமெச்சுகோ மேதம்வை டூரியம்
பாலை யொத்தபூ ராகமு மணிபவன் (அழ)

ஆர்வடி வேலுடன் மாமயில் மீதினில்
மேவிய கோலமு நீடிய தோள்களும்
மார்பினி லேபடர் தாமரை மாலையும்
பாவணி சூடிய மேனியின் ஜோபித (அழ)

அருகினி லேஉறை குறமகள் யானையும்
இருபுற மேவிய பொழுதொரு பான்மையும்
திருமறை கூறிய உனதருள் நேர்மையும்
அறைகுத லெளிதோ கணபதி நாவினுல் (அழ)

இராகம்-செங்கலா. தாளம்-ரூபகம்.

(ஈசனே யடியவ ரிதயமதில் நிதமிலகும் என்ற மெட்டு.)

பல்லவி.

வேலனே விரிமலரினு மழகிய ஒளிதிகழும்
பாலனே பந்தவினை வந்தணுகா தென்றனையாள் (வே)

அநுபல்லவி.

சீலம் மூத்தமெய்த் தாலத்திலெனைச்
சேவற்கொடியுடனேபுகழ் மேவக்கதியருள்வாய் வடி (வே)

சரணங்கள்.

தந்தையான சிவ சங்கரனுக் கிங்கிதமாய்
விஞ்சை யோதியவா விமலகுரு சமாசனே
தஞ்சமென் றனை அஞ்சலித்தேனே
சஞ்சலமே கொண்டுடலம் நொந்து கெடாதருளும்வடி (வே)

விண்ணவர் துயர் தீரப்பல சூரர்களை
மண்ணுக்கிரைதர ஒக்கியேகுறை நீக்கியவா
பண்ணவர்மனம் நண்ணு மாதவா
பாவத்தொழில் போக்கிச்சுடர் ஞானத்தெருள் தேக்கும்வடி ()

விந்தமாகிரியின் கருவமதைச் சிறுமைசெய்த
கும்பமாமுனி தமிழுறமலை நிலைபெறுசுகனே
கந்தநாதனே சந்த்ரவதன
கணபதி சுயமதுரமொழி குணமொடு நயமருளும்வடி (வே)

இராகம்-நாதநாமக்கிரியை. தாளம்-சாப்பு.

(ஆனந்தக்களிப்பு மெட்டு.)

பல்லவி.

குமர தண்டாயுத சுவாமி—என்றன்
குற்றங் குறைகளைத் தீர்த்தருள் நேமி (குமர)

அநுபல்லவி.

மமதைகள் கொண்டுமே அனந்தம்—நல்ல
மனிதரைப் பாராமல் சீறிச்சி னந்தம்

அமலன்நற் பாதார விந்தம்—அன்றி
ஆருமே யில்லையிவ் வுலகினிற் சொந்தம் (குமா)
சிரமே வணங்கா திருந்தேன்—கெட்ட
சிறியவ ரோடுற வாடியே திரிந்தேன்
பரமேயுன் புகழையின் றறிந்தேன்—வெகு
பரிவுடன் சாஷ்டாங்க நமஸ்காரம் புரிந்தேன் (குமா)
குணமில்லா வாழ்வினை நம்பி—உன்றன்
கோயிலை நாடாமல் அலைந்தேனே வெம்பி
கணபதி தமிழ்மணம் ததும்பிப்—பிறவிக்
கடல்சோரக் கதிதந்து ஆளிபன் தம்பி (குமா)

இராகம்-செஞ்சுருட்டி. தாளம்-ஆதி.

(செந்திக்குமர வேலுண்டு என்ற மெட்டு.)

பல்லவி.

தில்லைக்கனகசபேசன் — சீர்நடராஜன் (தில்லை).

அநுபல்லவி.

சீறும ராவுடன் பாயும்பு லியுமே
நாவினி லேதுதி பாடிட ஆடிய (தில்லை)
சிறக்க மத்தளம் அடிக்க நந்தியும்
களிக்க மேடையில் குதித்து ஆடிய (தில்லை)
திந்திமி திமிதிமி திந்திமி திமிதிமி
திந்திமி திமிதிமி திமியென ஆடிய (தில்லை)
சீதள மாமலர் தாமரைக் காலினால்
காதினி லேகுழை சூடியன் றாடிய (தில்லை)
தினமும் பலரும் புகழும் அரனே
கணமும் உமையும் பணிய ஆடிய (தில்லை)
தீகழுற்றிடு தமிழ் புகழ்பெற்றிட அருள்
கணபதிக்குமே துணையருகிருப்பவர் (தில்லை)

இராகம்-தேசிகத்தோடி. தாளம்-ஆதி.

(ஞானரஞ்சிதமே என்ற (வண்ணம்) மெட்டு.)

மோனமந்திரமே — பா
ஞானதந்திரமே — சா
மேலை ழுந்துமே
நாத விந்தினி
லூறி நின்றிட — சுந்தரமான

மாதுஉந்தியிலே — கரு
வாகநின்றதுவே — ஒரு
மாத முந்தவ
ரூது வந்திடு
ஈந்த முங்கசி — வின்றியேபாக

யாவளர்ந்தனவே — சிசு
வேபிறந்திடவே — அணை
தேக னொர்ந்துமே
வேத னம்பட
தேவ கின்திரு — மங்களமான

பாதபங்கயமே — கதி
வேறறிந்திலனாய் — குக
ஞான பண்டித
சாமி யென்றிடு
வேலை வந்துமே — தொந்தரவான

நோயகன்றிடவே—கரு
ணைகான்தாவே—நில
மீது சந்ததம்
நேமி உன்றனை
மேவ என்றனை—வெண்பிறைபோல

வேபயந்தனளே — பிது
ரேமகிழ்ந்தனனே—புவி

மீது தந்திர
மாதர் வஞ்சக
மோகம் வென்றிட — அம்பிகைபால

னேபணிந்தனனுன் — அரு
மாமருந்தெனவே — துய
ரேப றந்திட
வேக னிந்துவ
ராதி ருந்திடில் — நம்பினதாச

னேதறிந்திடுவேன்—திரு
நீறணிந்தவனே—குற
வேட மங்கையை
கான கந்தனில்
மேவி கொஞ்சிய—ரஞ்சிதபூம
சிகிமீதிருக்குங்குமரா—அருள்பாலிக்கும் கந்தவேளே

குறவஞ்சி.

(பச்சைமலை பவளமலை என்ற மெட்டு.)

சண்முகனும் கண்ணியவான்
சரவணமவரு பாலன் — ஞான
பரனெனத்தகு சீலன் — மனச்
சஞ்சலங்கள் தீர்த்திடுவான் தங்கவடிவேலன்

எண்ணரிய ஜீவகோடி
எத்தும்புகழ் வாசன் — சூரர்
போற்றுமயி லாசன் — மனம்
ஏங்கிடாமல் ஓங்கிடவீ டேற்றும்பிர காசன்

மண்ணுலகில் உன்னதமாம்
மாட்சிமிபெறும் யோகன் — பல
காட்சியுறுந் தேகன்—மன
மாயையினுல் ஒய்வுறுது மாற்றும்வள்ளி பாகன்

கண்குளிரக் கணபதிக்குக்
கருணைபுரி வோனே—அருள்
தருணமிது தானே—மனம்
அன்மவினை பற்றிடாது கதியளிப்பாய் கோனே.

திருப்புகழ்.

(வங்கார மார்பிலணி என்ற மெட்டு.)

சந்தக்குழிப்பு.

தந்தான தானதன தானதன தானதன
தந்தான தானதன தானதன தானதன
தந்தான தானதன தானதன தானதன—தனதான

வண்டாடு மேகநிற மானகுழ லாரமுத
பெண்டோடு கூடிவிளை யாடுமுரு கேசவெனை
வந்தாள வேநினது பாதமல ரேகதிய—தருள்வாயே
சங்கால மாதர்விழி யேயெனது மாபதனி
லம்பாக வூடுருவி மேனிகன லாகவெழ
சம்போக வாசைதனி லேமனது நாடுதுயர்—களைவாயே
வெண்தாடி யோடுகிழ மாகிகுற மாதைமுன
மின்பாக மேவியணை வாய்மெனவ மோகமொடு
வெங்காடு சோவழி கூடுனது சேவடியை—மறவேனே
சங்கோதை யானகுரல் நாளுமிரு போதுமெழ
சங்கீத ராகமது பாடுமொலி பாகமுற
தண்டோடு கோழியொரு பாணியுற வேகருணை—புரிவோனே
கண்கூடு காணவறி யாதசிறு ஏழைமொழி
சந்தோட மோடுகொளு வாயமல மேருகிரி
கங்காள தேவசுப பாலகுரு நாதபுகழ்—நிறைவோனே
அஞ்சாத சூருயிர் மாயபல சேனையொடு
வெஞ்சாப மேறவிடு மாமுமுக சாமியுனை
அன்பாக வேதுதியு பாசனைக ளோதவருள்—தருவாயே
சண்டாள மேகவொரு போதுமற வாதசுக
முண்டாக ஆகமசு போதநிலை யேதமற
தந்தாள வேவருத னீதியது ஆளுமெனை—குகநாதா
மந்தாரை ஆரமுறு தேவமகள் சோகமுற
செங்தேனு மாவுமுணும் வேடமகள் காதல்பெற
மன்றாடு வேலவய மாகுமலர் மாலையணி—பெருமானே.

(கருவினுருவாகிவந்து என்ற மெட்டு.)

சந்தக்குழிப்பு.

தனனதன தானதந்த தனனதன தானதந்த
தனனதன தானதந்த—தனதான.

பவவினைக ளேதொடர்ந்து சகமதனி லேபிறந்து
பலதொழில்க ளேபுரிந்து பாமாதர்

பருகுசுக மேநினைந்து தருமநெறி யேமறந்து
பகைபிணிக ளால்வருந்தி நவைசேர

கவலைமிக வேமெலிந்து அவபுருட ராயுழன்று
கயவர்களின் வீடுசென்று பசியாலே

கவளநிறை சோறுதின்று நிறைவயிறு சோர்கின்று
கடைவழியி லேதிரிந்து அழிவேனோ

நவமணிக ளேபதிந்த மகுடமுடி மீதணிந்த
நயனவுட லாய்விளங்கு சுராராஜன்

நகசமிடை யேவளர்ந்த வடிவமிகு மாதுசேர்ந்த
நடனமயி லேறிநின்ற முருகோனே

அவனிதனி லேசிறந்த சரவணையி லேபிறந்து
அவுணர்படை மீதுசென்ற குமரேசா

அழகுசுடர் வேலடைந்த பழனிமலை மீதமர்ந்த
அருணகிரி யேபுகழ்ந்த பெருமானே.

சந்தக்குழிப்பு.

தாந்த தானன தந்தன தந்தன
தாந்த தானன தந்தன தந்தன
தாந்த தானன தந்தன தந்தன—தந்ததான.

சாந்த வாசக மின்புற அம்பினுங்
கூர்ந்த வேல்விழி நெஞ்சுற வஞ்சனை
சார்ந்த மேனிகொ டுத்திட தந்திர—வஞ்சமாதர்

கூந்த லானத விழ்த்துவி மூக்திட
சாந்து வாடைகி ளம்பிள மூம்பிட
கூம்ப லானம ருங்குது வண்டிட—கொங்கைமீது

சேர்ந்த தூசுத ளர்ந்துச ரிந்திட
    ஊஞ்சல் மீதிலி ருந்துஅ ணேந்திடு
    சேர்ந்த வாயித ழுங்கனே தந்திடு—துன்பமான
  சோம்ப லோடுமெ லிந்துவ றண்டிடு
    காங்கை மீறிப வுந்திர மந்திகை
    தோன்றி டாதுவி ரும்பிடு மென்றனே—இன்றுகாவாய்
சேந்து மாபுளி சந்தன மந்தரை
    வேம்பு மாதுளை நந்திக டம்பொடு
    சோங்க மாமரு துங்கமு கும்பல—துன்றுசோலே
  காஞ்ச னுருவ யங்கவிர் குஞ்சரம்
    ஆம்ப லாதிகை அந்திசெ வந்திகை
    காந்த ளோடும லர்ந்துவி ளங்கிட—கந்தம்வீச
காந்த மோதிடு மந்தண ருந்தொழ
    வேந்த ரானவ ரும்பணி வுண்டிட
    காந்து வாணிப ரன்பொடு கும்பிடு—தண்டபாணி
  கோண்டை வாயித ழுங்கலே குஞ்சரி
    பாந்த மாகம ருங்குவி ருந்திடு
    கோம்பை மாநகர் தங்கிய சுந்தர—தம்பிரானே.

விஷ்ணு தோத்திரம்.

இராகம்-தேசிகத்தோடி. தாளம்-ரூபகம்.

(மன்றுளாடியவா என்ற மெட்டு.)

பல்லவி.

ரங்கநாயகனே ஸ்ரீசா
பங்கயப்பூ ஆசனத்தில் தங்கிடுஞ்செந் திருவணேந்த (ரங்)

அநுபல்லவி.

குன்றைத்தூக்கிக் குடையாய்ப்பிடித்தவா
கோபிகாஸ்திரீகளைக் கூடிச்சுகித்தவா
கன்றைத்தூக்கி விளாவிலடித்தவா
காளிங்கநிர்த்தனம் புரிந்தவா ஆழியில்அஸ்திரம் எறிந்தவா (ரங்)

விதுரனில்லினில் விருந்தமுதுண்டவா
வேடிக்கையாகவே பாடிக்குதித்தவா
மதுரைநகர்தனில் மாமனைக்கொன்றவா
மண்டலபானுவை மறைத்தவா எண்டிசையாவுமே உடைத்தவா (ரங்)
ஆலிலைமீது பள்ளிகொண்டவா
யானையழைத்திட ரக்ஷித்தஆண்டவா
பாவியன்கணபதி பாவத்தைப்போக்கவா
பாகதியளித்திடும்பூமா சுரர்பதி துதித்திடுந்தாமா (ரங்)

இராகம்—இ-தோடி. தாளம்—ஆதி.

(கணபதியே துணையிருக்க என்ற மெட்டு.)

பல்லவி.

ரகுபதியே கிருபைசெய வருவாய்தயாபரனே (ரகு)

அநுபல்லவி.

தகதகென ஒளிருபாதா தமியேன் எளியேன் பழியாவண்ணம் (ரகு)

தொகையரா.

கல்லான அகலிகை கடினசாபந்தீரக் காலால் மிதித்த ரகுராமா
எல்லாம் செயவல்லநீ உனக்கு இணையாள்வதொரு பரமாமா

முடுகு.

சத்திய வாக்கரிச்சந்த்ரன் சந்ததம் காத்தசுந்தரன்
நித்தியம் கணபதி நினைந்து நினைந்து உருகுமகிபா
கருணைபுரிவாய் சுகுணராமா (ரகு)

இராகம்—கல்யாணி, தாளம்—ரூபகம்.

(ராமமுகி ப்ரணதபால என்ற மெட்டு.)

பல்லவி.

நாராயண சாமளரூப பதமே கதியே அகில புவன (நாரா)

அநுபல்லவி.

சர்வலோக சர்வகாரண சாமவேத சகுணவடிவ
சமயமிதுவே கருணை புரிவாய் (நாரா)

கந்தம்வீசு கந்தமாதன கஞ்சவாச கன்னிபூமா
கான லோல பால லீலா (நாரா)

திருவிலாச திவ்யநேத்ரா திருவருளாற் கணபதியை
சிந்தை சுரந்து வந்து அருள்வாய் (நாரா)

ஸ்ரீராகம். தாளம்-ஆதி.

(பார்வதியம்மைகதியே என்ற மெட்டு.)

பல்லவி.

ராவண சம்மார ஹரியே—ஜானகிபூமா (ராவ)

அநுபல்லவி.

சேவடி துதிக்குமென் செறிதுயர் தவிர்ப்பாயே
திருநகர் மிதிலையி லுறுசிலை வளைத்தவா (ராவ)

சரணங்கள்.

தேவர்கள் பூமழை சிதறிடத் தசமுகன்
சிரமது துணிபட ஒருகணை தனியெய்து
சேவக னனவி பீஷண நேசனைச்
சிலத்தொடு ஆளப்பதி ராஜக்கொடி பாலித்திடும் (ராவ)

ஆவலுட னேதுதி அனுதின மோதிடும்
அழகிய சுடர்மணி கணபதி உரைகவி
ஆவார மத்தி சேவாரும் நித்யா
அன்புற்றிட துன்பற்றிட பின்பற்றிடு பொன்பெற்றவா (ராவ)

மங்களம்.

(சரிசரி சாமுத்திரிகா என்ற மெட்டு.)

பல்லவி.

ஜெயஜெய சிவகாமி நேசனுக்கு (ஜெய)

அநுபல்லவி.

திருமாலுடன் சதுர்வேதனும்
திருமாதுடன் கலைவாணியும் (ஜெய)

சரணம்.

ஜெகந்தனில் பவவினைகள் தீர்க்கும் கணநாதர்க்கும்
திருமலைசூழ் கோம்பைமேவும் தெண்டபாணிசுவாமிக்கும்
சிறந்த நீதிக்கும்—நீதி
உயர்ந்த சாந்தர்க்கும்—சீலன்
திருவாக்கினில் கணபதியும்
உருவாக்கிய கீதங்கட்கும் (ஜெய)

ஸ்ரீ தண்டாயுதபாணி தோத்திரம்

சம்பூர்ணம்.

சென்னை-600 008.
17824


மீனலோசனி அச்சியந்திரசாலை
தெற்குக்கோபுர வாசல்,
தொட்டியன் கிணற்றுத்தெரு,
மதுரை.